# ஈரோடு மாவட்டம்
# பெருந்துறை தேர்வுநிலை பேரூராட்சி

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

<u>ந.க.எண். 144/2010</u> <u>நாள்: 7.09.2010.</u>

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி பொதுநிதியில் கீழ்க்கண்ட வேலையினைச் செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெருந்துறை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **22.09.2010**–ம் தேதி புதன் கிழமை மாலை **3.00** மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். இதற்காக பேரூராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் டெண்டர் உறைகளைப் போடலாம். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **22.09.2010** அன்று மாலை **3.30** மணிக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **21.09.2010**–ம் தேதி மாலை **3.00** மணிக்குள் தொகை மதிப்பீடு ரூ. **0.10** ஆயிரம் முதல் **2** லட்சம் வரை ரூ. **300/–**+ மதிப்பு கூட்டுவரி, **2** லட்சம் முதல் **5** லட்சம் வரை ரூ. **750/–**+ மதிப்பு கூட்டுவரி, ரூ. **5.00** லட்சம் முதல் **10** லட்சம் வரை ரூ. **1500/–**+ மதிப்பு கூட்டு வரி , ரூ. **10.00** லட்சம் முதல் **25.00** லட்சம் வரை ரூ. **6000/–** + மதிப்பு கூட்டு வரி மற்றும் ரூ. **25.00** லட்சம் முதல் **50.00** லட்சம் வரை ரூ. **9000/–** + மதிப்பு கூட்டு வரி உடன் சேர்த்து இவ்வலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சி தொகை மற்றும் இதர விபரங்களை இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## <u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்</u>

1) ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

2) ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3) செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ அல்லது டிமாண்டு டிராப்ட் மூலமோ செலுத்தலாம். அரசால் வெளியிடப்பட்ட தேசிய சேமிப்புப் பத்திரம் அல்லது அரசுக் கடன் பத்திரம் ஆகியவைகளும் ஏற்றுக் கொள்ளப்படும். காலம் கடந்த பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர்

ஏற்றுக் கொள்ளப்பட்டால் மேற்படி பத்திரங்களை செயல் அலுவலர் பெயருக்கு மாற்றி எழுதித் தர வேண்டும்.

4) ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், பெருந்துறை பேரூராட்சி என்று முகவரியிட்டுக் கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.

5) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

6) ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விளக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

7) வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.

8) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ. 20/– மதிப்புள்ள ஸ்டாம்பு பேப்பரில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும். உடன்படிக்கை படிவத்தினை ரூ. 1/– பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

9) வேலை உத்திரவில் குறிப்பிடுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.

10) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 9 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளையும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

11) குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைகென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படுத் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12) சாலை வேலைகளை பொறுத்தவரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. பரத்தல் வேலையை நல்லமுறையில் செய்து வேலையை முழு அளவில் முடித்த பின்னர்தான் முழுத் தொகையும் பட்டுவாடா செய்யப்பட்டும்.

13) சிமெண்ட் பேரூராட்சியில் இருப்பு இருப்பின் சப்ளை செய்யப்படும். சிமெண்ட் பேரூராட்சியில் இருப்பு இல்லாதபட்சத்தில் ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கக் கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும்.

14) கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் பேரூராட்சி பொருட்களாகக் கருதி அப்புறப்படுத்தப்படும்.

15) யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

16) வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

அ) கூடுதல் வைப்புத் தொகை : 3 %

ஆ) வருமான வரி : 2 %

இ) வருமான வரி சேவை வரி : 10 %
& கல்வி வரி : 3 %

ஈ) தார்க்கிரையம் : அங்கீகரிக்கப்பட்ட

உ) சிமெண்ட் கிரையம் : வேலைப் பட்டியலின்

ஊ) ரோலர் வாடகை : படி.

எ) கலவை இயந்திரம் வாடகை : --

ஏ) விற்பனை வரி : 2 %

ஐ) விற்பனை வரி மேல்வரி : 5 %

ஒ) தொழில்நுட்ப உதவியாளர் ஊதியம் : அங்கீகரிக்கப்பட்ட வேலைப்பட்டியலின்படி.

ஓ) கட்டுமானத் தொழிலாளர் நல உதவித்தொகை: 0.03 %

17) விதிமுறைகளின்படி தொடர்புடைய வேலைக்குரிய பட்டியல் பேரூராட்சிகள் உதவி செயற் பொறியாளரின் மேலொப்பம் பெற்றபின்னரே ஒப்பந்தக்காரர்களுக்கு பட்டியலுக்குரிய தொகை காசோலை மூலம் வழங்கப்படும்.

18) தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

19) வேலைகள் சம்பந்தமான அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

20) வேலைகள் சம்பந்தமாக இதர விவரங்கள் வேண்டுவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் செயல் அலுவலரிடம் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**குறிப்பு :-**

1. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நிபந்தனைகள் வேலை நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு www.tenders.tn.gov.in, www.townpanchayats.tn.gov.in/tender இணையதளத்தில் பார்த்து தெரிந்துக்கொள்ளலாம்.

2. Tender form can be downloaded free of cost from www.townpanchayats.tn.gov.in/tender

## வேலையின் விவரம்

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | செலுத்த வேண்டிய டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி நமூனா | | | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | விலை ரூ. | விற்பனை வரி மேல்வரி | மொத்தம் | |
| 1. | **பொதுநிதி வேலை – 2010-2011**<br>**பெருந்துறை பேரூராட்சிக்கு உட்பட்ட 7-வது வார்டில் பழைய பேரூந்து நிலைய சாலையில் தினசரிச் சந்தை முதல் ரவுண்டானா வரை தார்சாலை அமைத்தல்.** | **3950000/-** | **79000/-** | **9000** | **360** | **9360** | **90** நாட்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | **பெருந்துறை பழைய பஸ்நிலைய ரோடு ஈரோடு ரோடு முதல் (போலீஸ் ஸ்டேசன் எதிர்புறம்) ஆர்.எஸ்.மெயின் ரோடு வரை தார்சாலை அமைத்தல்.** | **515000/–** | **10300/-** | **1500** | **60** | **1560** | **60 நாட்கள்** |

செயல் அலுவலர்,
பெருந்துறை பேரூராட்சி.

**<u>பெறுநர்:–</u>**

பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும்.

**<u>நகல்:–</u>**

1. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள், உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு.
3. இளநிலைப் பொறியாளர், பெருந்துறை பேரூராட்சி, பெருந்துறை.
4. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், பெருந்துறை, சென்னிமலை, ஊத்துக்குளி, ஈரோடு.
5. செயல் அலுவலர், க.செ.பாளையம், காஞ்சிக்கோவில், நல்லாம்பட்டி, பெத்தாம்பாளையம், குன்னத்தூர், ஊத்துக்குளி, சென்னிமலை.
6. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
7. நகல்:- தலைவர் மற்றும் செயல் அலுவலர் மேஜைக்கு.